# வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**R. L. T. O. P No. 1/2025**

மனுதாரர் தரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம் (1973ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திருமதி.பா.ரம்யா என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | | |
| த/பெ. | வீராச்சாமி | | |
| கிராமம் | | தொழில் | Engineer |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 46 |

---

முதல் விசாரணை 29-01-2026

நான் மனுதாரர். மனுதாரர் தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 30.09.2023ம் தேதியில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் எழுதிக்கொண்ட வாடகை ஒப்பந்தம் அசல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 29.10.2024ம் தேதிய மனுதாரர் தகவல் அறியும் சட்டப்படி Director of e-governance அலுவலகத்தில் பெற்ற பதில் அசல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 01.04.2024ல் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 03.04.2024 ம் தேதிய மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் எண்ணம் –2 அசல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 02.04.2024 ல் அறிவிப்பு அனுப்பியதற்கான போஸ்டல் ரசீதுகள் எண்ணம்– 2 அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 26.03.2024 ம் தேதிய மனுதாரர் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்ய அனுப்பிய விண்ணப்பம் இணையதள நகல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 30.09.2023 ம் தேதியில் மனுச்சொத்திற்கு மனுதாரர் செலுத்திய வீட்டுவரி ரசீது இணையதள நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 27.10.2022 ம் தேதியில் மனுதாரருக்கு பழனிகுருசாமி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.29 17:42:29 +0530